UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS LIBRARY
RECEIVED
1980-7-5
PERIODICALS DIVISION

தரத்திலே சிறந்த
மான் - முயல்
வரிக்குதிரை
யானை - விளக்கு
செவ்வரு பூ
புலி மார்க் ஓடுகளையே
பாவியுங்கள்
மூ. நா. பொன்னம்பலம்
36, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

பக்கங்கள் 6 ★
ஈழநாடு 50 சதம்
The EELANAADU
மலர் 22 ஆடி 21 ஷக்டா 21 இதழ் 146
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 5-7-80

அமைச்சரின் யாழ். விஜயம் ரத்து

(யாழ்ப்பாணம்)
கிராம அபிவிருத்தி அமைச்சர் திருமதி விமலா கன்னங்கரா யாழ்ப்பாணத்திற்கு இன்று மேற்கொள்ளவிருந்த விஜயம் திடீரென ரத்துச் செய்யப்பட்டுள்ளது. (வே)

அரச ஊழியர் சிங்களம் கற்க
6 மாதம் சம்பளத்துடன் லீவு!

உயர் அதிகாரிகளுக்கு தமிழ் கற்பிக்க நடவடிக்கை

பத்திரிகையாளர் மகாநாட்டில் அமைச்சர் 'தேவா'

(கொழும்பு)

அரசகரும மொழியான சிங்களம் தெரியாத அரச ஊழியர்களுக்கு அம்மொழியைக் கற்றுக் கொள்ள வசதி செய்யும் பொருட்டு ஆறுமாத காலம் முழுச் சம்பளத்துடன் லீவுவழங்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

இதே வேளையில், சிங்கள மொழித் தேர்ச்சியின்மை காரணமாக இதுவரை பதவி உயர்வு பெறாத அரசாங்க ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

நாடு முழுவதிலும் உள்ள கச்சேரிகளில் தமிழ்மொழியை அமுல் செய்வதில் இப்போது இருந்து வரும் சிரமங்களைத் தவிர்க்கும் பொருட்டு சகல உயர் அதிகாரிகளுக்கும் தமிழ் மொழியைக்கற்பிக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாவட்ட அபிவிருத்தி சபைகள் இவ்வருட இறுதிக்குள் இயங்க ஆரம்பிக்கும். இதற்கான சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இத்தகவல்களை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ தேவநாயகம் நேற்று! தமது அமைச்சின் புதிய அலுவலகத்தில் நடைபெற்றபத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

ரொறிங்டன் சதுக்கத்தில் உள்ள பொதுநிர்வாக அமைச்சு கட்டிடத்தின் மேல் மாடியில் தமது அமைச்சுக்கான அலுவலகத்தை நேற்று திறந்து வைத்த திரு தேவநாயகம் புதிய அலுவலகத்தில் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் மேலும் கூறியதாவது:

மாவட்ட அபிவிருத்தி சபைகள் இயங்க ஆரம்பித்ததும் அச்சபைகளின் ஊடாகவும் அரச அதிபர்களின் ஊடாகவும் உதவி அரசாங்க அதிபர்கள் ஊடாகவும் உள்நாட்டு அமைச்சு அபிவிருத்திப் பணிகளில் நேரடித் தொடர்பு வைத்திருக்கும். (ம-இ)

பொத்துவில் விவகாரம்: ஜூலை 21 ல் விசாரணை

(கொழும்பு)

பொத்துவில் எம். பி. பதவி தொடர்பாக தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணை மீண்டும் இம்மாதம் 21 ம் திகதி நடைபெறும்.

இவ்வழக்கின் பிரதிவாதிகளான தேர்தல் ஆணையாளரும் ஐ. தே. க பொதுச்செயலாளரும் முன்னர் தாக்கல் செய்திருந்த மனுவுக்கு திரு. அமிர்தலிங்கமும் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரமும் நேற்று முந்தினம் பதில் மனு தாக்கல் செய்தனர்.

அரசியல் அமைப்புச் சட்டத்திற்கமைய எம். பி. ஒருவரை நியமனம் செய்யுமாறு கோரி ஐ. தே. க பொதுச் செயலாளருக்குத் தாம் கடிதம் எழுதப் போவதாக தேர்தல் ஆணையாளர் எமக்கு அறிவித்துள்ளார் என்றும் திரு கனகரத்தினம் பொத்துவில் தொகுதியின் ஐ. தே. க. எம். பி. யாக இருந்தார் என்று ஐ. தே.

[6-ம் பக்கம் பார்க்க]

கடத்தல் படகின் மீது கடற்படை துப்பாக்கிச் சூடு!

பொருட்களை விட்டு ஆட்கள் ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

பலத்த துப்பாக்கிப் பிரயோகத்தின் பின் கைப்பற்றப்பட்ட வள்ளம் ஒன்றும் ஒரு லட்சத்து இருபத்திஐயாயிரத்திற்கு அதிகமான ரூபா பெறுமதி வாய்ந்த பிடிப்புகையிலை மூடைகளும் காரைநகர் கடற்படையினரால் கைப்பற்றப்பட்

6-ம் பக்கம் பார்க்க)

ரியூட்டரி மாணவி கொலைவழக்கு:

சாட்சிக்கு பயமுறுத்தல்
நீதவான் கடும் எச்சரிக்கை

லோகநாதனுக்கு பொலிஸ் பாதுகாப்பு

(யாழ்ப்பாணம்)

ரியூட்டரி மாணவிகொலை வழக்கில் சாட்சியமளித்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தி லோகநாதன் இரு இளைஞர்களால் நீதிமன்ற வளவிற்குள் பயமுறுத்தப்பட்டதாக நீதவானின் கவனத்திற்கு நேற்று கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து நீதவான் கடும் எச்சரிக்கை செய்தார்.

சாட்சியமளித்ததின் பின் லோகநாதன் வெளியில் சென்ற போது இரட்டையர்கள் வழிமறித்து நீர்தானே சாட்சியமளித்த வல்வெட்டித்துறை வாலிபர் என்று தன்னைக் கேட்டதாக லோகநாதன் நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்தார். தாம் பொலிஸ்நிலையம் சென்று திரும்பி வந்ததின் அவர்களை காணவில்லை என்றும் [illegible]

பருத்தித்துறை நீதவான் சே. எஸ். மகேசன் நீதிமன்ற வளவிற்குள் இருக்கும் எவரையும் வெளியில் செல்லாமல் தடுக்கும்படி கட்டளையிட்டு அவர்களுள் அப்பேர் வழிகள் இருக்கிறார்களா எனப்பார்க்கும்படி லோகநாதனிடம் கூறினார்.

பொலிஸ் உத்தியோகத்தருடன் நீதிமன்றத்தில் திரண்டிருந்தவர்களை லோகநாதன் சென்று பார்த்த பின் அவர்கள் இன்று வரவில்லை என்றார்.

நீதவான் சாட்சிகளைப்பயமுறுத்துபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தார்.

சாட்சிகள் பயப்படத் தேவையில்லையென்றும் உள்ளதை உள்ளபடி சொல்ல வேண்டுமென்றும் அவர்களுக்

(6ம் பக்கம் பார்க்க)

உ
சிவமயம்
திருமண அழைப்பிதழ்
அன்புடையீர்!
நிகழும் ரௌத்திரி வருஷம் ஆனிமாதம் 25-ம் நாள் (9-7-80) புதன்கிழமை பிற்பகல் 1-12 மணி முதல் 2 35 மணிவரையிலுள்ள துலாலக்கினசுப முகூர்த்தத்தில்
எமது மகன் திருநிறை செல்வன் சிவராஜசூரியர் அவர்களுக்கும்
எமது மகள் திருநிறை செல்வி வசந்தராணி அவர்களுக்கும்
நல்லூர் சிவன்கோவில் மண்டபத்தில் திருவருள் துணைகொண்டு நடைபெறவிருக்கும் திருமண வைபவத்துக்கு தாங்களும் சுற்றஞ்சூழ வருகை தந்து ஆசீர்வதிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.
இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
ச. நா. கந்தையாவும் பாரியாரும் (ஓய்வுபெற்ற கல்லூரி அதிபர் நயினாதீவு) 18/4, பி. ஏ. தம்பி லேன் வண்ணார்பண்ணை.
க. சபாரத்தினமும் பாரியாரும் (ஓய்வு பெற்ற பிரதம களஞ்சியப் பொறுப்பாளர், Delmege Forsyth & Co) [illegible]
6233

வடமாநில மொழிவழித் தொழிற்சங்கங்களின்
வளர்ச்சி நிதிக்காக
வரணியூரான் குழுவினரின்
'அசட்டு மாப்பிள்ளை'
யாழ் வீரசிங்கம் மண்டபம்
5-7 80 சனிக்கிழமை (இன்று) பி. ப. 6 30மணி
ரிக்கற் மண்டப வயிலில்.
6232

வரி விளம்பரம்

விற்பனைக்கு

இங்கிலாந்தில் பாவிக்கப்பட்ட டீசல் மொறிஸ் LD5 வான் விற்பனைக்குண்டு. விலை ரூபா 62,000/- 37, நம்பர் லேன், கண்டிக்குளி, போன் 8171, இன்டர் ட்ரேட் கொம்பனி, 295 காலி வீதி, கொள்ளுப்பிட்டி. போன் 37697. 6167

கோழித்தீன், மாட்டுத்தீன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள "சிறி நடராஜா பிறதர்ஸ்", இணுவில். 6211

அரசாங்க அனுமதியுடன் புதிதாகக் கட்டப்பட்ட கோட்டா அரிசி மில் விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு விடப்படும். நேரில் வரவும். சாந்திமில், வட்டுக்கோட்டை. 6191

பாடசாலைத் தளபாடங்கள், சில குளிர் சாதனப்பெட்டி, 3½ கோஸ்பவர் மோட்டார், சைக்கிள் விற்பனைக்குண்டு. 5, 6-ம் திகதிகளில் பார்வையிட்டு பெறலாம். கனகரத்தினம், 20/4, சிவகுருநாதர் வீதி, கோவில் பின் ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம். 6218

எம்மிடம் பாவித்துக் கழித்த 45 கலன் வெற்று டிறம்கள் விற்பனைக்குண்டு. வேலை நேரத்தில் பார்வையிடலாம். விலை விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள். மின்வெற் தொழிலகம், யாழ்ப்பாணம். 6102

டீசல் மினி பஸ் இங்கிலாந்தில் இருந்து தருவித்தது. 304 கார் ஆகியவை விற்பனைக்குண்டு. கப்பிறிகோன் என்டர்பிறைஸ், பொற்பதி வீதி, கொக்குவில் 6209

நல்லநிலையிலுள்ள C B 125 ஹொண்டா, 75 CC லம்பிறட்டா, C 90 ஹொண்டா திருத்தி அமைக்கப்படவேண்டிய நிலையில் உள்ள 10 [illegible] வலு [illegible] மோட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும், சபாநாதன், 14, [illegible] லேன், கந்தர்மடம். 6217

கல்வி

3 மாத டிப்ளோமா மோட்டார் மெக்கானிக்-டீசல் மெக்கானிக், மரைன் மெக்கானிக், மின்னியல் பயிற்சிகள் 10-07-1980ல் ஆரம்பமாகின்றன Institute of Engineering Technology, 9/1, Stanley Road, Jaffna. 6210

G. C. E. (O/L) மாணவருக்கும் பிறநாடு செல்பவர்களுக்கும் ஆங்கில இலக்கணம் இலக்கியம் (EMMA) (MCBETH) ஆங்கிலப் பேச்சு Spoken English தனிப்பட்ட முறையாயும் வீடுகள் சென்றும் கற்றுக் கொடுக்கப்படும். கடிதத் தொடர்பு நம் 6186 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 6186

தேவை

மாவிட்டத்திலும் நவக்கிரியிலும் [illegible] தரிக்கும் இடத்திற்கு [illegible] சல்லியும் அத்து மண்ணும் விநியோகம் செய்ய விரும்பியவர்கள் கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். [illegible] பொறியியலாளர், இலங்கை மின்சாரசபை, 257/2

விற்பனைக்கு

பயனியர் ஸ்ரீறியோ செட் ஸ்பீக்கர்களுடன் பாவிக்கப்படாத நிலையில் விற்பனைக்குண்டு. 28, பண்டாரக்குளம் வீதி, நல்லூர். 6220

வகுப்புகள்

அரச ஊழியர்களுக்கான இரவு வகுப்புகளும், க. பொ. த. சாதாரணப் (O.P.T.) சிங்கள வகுப்புகளும் நடைபெறுகின்றன. எம். பி. தாஸ், 180, பிலோமினா லொட்ஜ், 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 6165

தேவை

அனுபவமுள்ள நெசவாளர்கள் தேவை. தங்கும் வசதியும் கொடுக்கப்படும். தொடர்பு: 217/2, கடையிற்சாமி கோயில் ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம். 6214

பிறந்ததின வாழ்த்து

செல்வி கல்யாணரூபி

இரணைமடு கனகாம்பிகை அம்மன் கோவிலைச் சேர்ந்த சிதம்பரேஸ்வரசர்மா தம்பதிகளின் புதல்வியான கல்யாணரூபி (தங்கமணி) இன்று (5-7-80) தனது முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார். இவரை பெற்றோர், தாத்தா, பாட்டி, புளியங்கூடல் மாமா வெங்கடேச சர்மா, துன்னாலையைச் சேர்ந்த ஈசுவரமா, [illegible] மாமா, சின்னமாமா தனக்கோடியும் சந்தானச்சித்திரமும் புட்பலதா சித்தியும் மற்றும் பரஞ்சோதி சித்தப்பாவும் உறவினர்களும் கனகாம்பிகை அருள் பெற்று நீடூழி காலம் வாழ்த்துகின்றனர். 6198

முக்கிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

சோலைவரி நிலுவைகள்

1980ம் ஆண்டு 2ம் கந்தாயம் வரைக்கான நிலுவைகளை அறவிட வேண்டிய பற்றுச்சீட்டுகள் இம் மாநகராட்சிமன்ற உத்தியோகத்தர்களுக்கு 1-8 80ல் வழங்கப்பட்டிருக்கின்றன. எனவே தயவு செய்து இம் மாநகராட்சிமன்றத்திற்குச் செலுத்த வேண்டிய வரிப்பண நிலுவைகளை மேலும் காலம் தாழ்த்தாது மன்றப்பணிமனையில் 31-7-80ம் திகதிக்கு முன்பாகச் செலுத்தி தங்களின் ஒத்துழைப்பை வழங்குமாறு சகல வரியிறுப்பாளர்களையும் மிகவும் விநயமாகக் கேட்டுக்கொள்கின்றேன். குறிப்பிட்ட இக்கால எல்லைக்குள் வரி நிலுவைகளைச் செலுத்தத் தவறும் வரியிறுப்பாளர்களின் அசையும் ஆதனங்களை [illegible] நடவடிக்கை எடுக்கப்பட்டு நிலுவைகளை அறவிட வேண்டிய நிலைமைத் தவிர வேறு வழியில்லை என்பதை வருத்தத்துடன் அறியத் தருகின்றேன்.

க. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2-7-80. 6225

கேள்வி விளம்பரம்

இலங்கை மின்சார சபையைச் சேர்ந்த சுன்னாகம் மத்தியின் சார நிலைய தேநீர்ச்சாலையை ஏற்றுநடாத்துவதற்கான கேள்விகள் 80-07-15க்கு முன் கோரப்படுகின்றன. மேலதிக விபரங்களை நிலையப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொள்ளவும். 6215

பயிற்சி

ஒருவருட விவசாயப் பயிற்சி 17-25 வயதுடைய வாலிபர்கட்கு 4 8-1980 ஆரம்பமாகும். உடனடியாக விண்ணப்பிக்கவும். அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம், மருதனார்மடம், சுன்னாகம். 6216

2-வது நினைவுதினம்

டாக்டர் சரவணமுத்து சோமசுந்தரம்

தோற்றம்: 2-11-1912 மறைவு: 27-6-1978

திருமதி இ. சோமசுந்தரம்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மானிப்பாய் 6226

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பருத்தித்துறை

(வரையறுக்கப்பட்டுள்ளது)

பகிரங்க ஏலவிற்பனை

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத்தின் மொத்த விற்பனைக் களஞ்சியத்திலிருக்கும் கழிவு மா, கழிவுசீனி, கொப்பறா தேங்காய் மற்றும் பொருட்கள் எதிர்வரும் 12-7-80 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு சங்கத்தின் மொத்தக் களஞ்சியத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

பொதுமுகாமையாளர்,
பருத்தித்துறை
ப. நோ. கூ. சங்கம்.

பருத்தித்துறை,
1980-07-03 6223

மருத்துவமாது நியமனம்

யாழ்ப்பாணம் மாநகரசபை

மேற்கூறிய பதவிக்கான விண்ணப்பங்கள் மருத்துவ மாதுவாகப் பதிவு செய்யப்பட்டவர்களிடமிருந்து, யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரால் கோரப்படுகின்றது.

1. சம்பள விகிதம் வருடமொன்றுக்குப் பின் வருமாறு:- ரூ 2586 30×1 60×16 - 3576 (திரட்டியது)
2. வயது: 25 7-80-ல் திகதியன்று 45 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பங்கள் முடிவு திகதி:- 25-7-80

ஏனைய விபரங்கள் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்தில் நேர்முகமாகவோ கடிதம் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

க. சிவஞானம்,
[illegible]
[illegible] யாழ்ப்பாணம்

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

அணைக்கட்டுக்கு 16 ஆயிரம் ரூபா

(ஊர்காவற்துறை)

ஊர்காவற்துறை, சரம்போன் தெற்கு, பதவிகுளம் அணைக்கட்டு திருத்தவேலைகளுக்காக சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் சமூக சேவை திணைக்களத்தினால் பதினாறாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுளது.

இவ்வேலையை 15 நாட்களுக்குள் செய்து முடிக்கத்திட்டமிட்டிருப்பதாக மேற்படி வேலையைப் பொறுப்பேற்றுள்ள சரம்பொன் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார். (ரு)

தேவை

நல்ல முறையில் உபயோகிக்கப்பட்ட சிறியதும், நடுத்தரமானதுமான மோட்டார் வாகனங்கள்

கூட்டுத்தாபனமொன்று சிறியதும், நடுத்தரமானதுமான பெற்றோல் அல்லது டீசலில் இயங்கும் நல்ல நிலையிலுள்ள மோட்டார் வாகனங்களைக் கொள்வனவுசெய்ய விரும்புகிறது. நன்கு பராமரிக்கப்பட்ட ஓரளவு புதிய வாகனங்களை விற்பனவுசெய்ய விரும்பும் வாகனச் சொந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும்,

1. வாகனத்தின் வயது
2. வாகனத்தின் நிலைமை
3. எதிர்பார்க்கும் விலை

போன்ற விபரங்களுடன் 15-07-1980ம் திகதிக்கு முன் விளம்பர இல. 6212 'ஈழநாடு' [illegible] யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

62 2

மின் ஒளிக் கரப்பந்தாட்டச்

சுற்றுப்போட்டி

வல்வெட்டித்துறை, நெடியகாட்டு
இளைஞர் விளையாட்டுக் கழகத்தால்
நடாத்தப்படும்
ஆறுபேர் நாலுபேர் கொண்ட இரு
கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகளிலும்
யாழ். மாவட்டத்திற்குட்பட்ட கழகங்கள்
பங்குபற்றலாம்.
பங்கு பற்றும் கழகங்கள்
14-07-80க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்

6222 செயலாளர்.

Alliance Francaise

பிரெஞ்சு நட்புறவுக் கழகம்

பிரெஞ்சு மொழி படிக்க விரும்புபவர்களுக்கான ஆரம்ப வகுப்புக்கள் விரைவில் தொடங்கவுள்ளன. வாராந்தம் கழக உறுப்பினர்களுக்கு இலவசமாகப் பிரெஞ்சு திரைப்படங்கள் காண்பிக்கப்படும்.

16 மில்லி மீற்றர் இடக்கப்படக் கருவி வாடகைக்கு உள்ளது.

மேற்கொண்டு தேவைப்படும் தகவல்களுக்கு தொலைபேசி எண்: 7782 உடன் அல்லது யாழ்ப்பாணம், முதலாம் குறுக்குத்தெரு 130-ம் இலக்கத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

6104

மரண அறிவித்தல்

பூலோகசிங்கம் குமாரசாமி

முன்னாள் சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. பூலோகசிங்கம் குமாரசாமி நேற்று சிவபதம் அடைந்தார். இவர் பரமசுந்தரியின் அன்புக்கணவரும் வசந்தகுமாரி, டாக்டர் யசோதரா ஆகியோரின் அன்புத் தந்தையும் டாக்டர் தில்லைவாசன், டாக்டர் தனபாலசிங்கம் ஆகியோரின் மாமனாரும், வெற்றிவேலு (அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சுந்தரலிங்கம், திருமதிகள் செல்வநாயகி, சிறிநிவாசன், வேதநாயகி கனகசபாபதி, இராசநாயகி அபேயசிங்கம் ஆகியோரின் சகோதரரும், டாக்டர் எஸ். ஏ. வெற்றிவேலுவின் சகலனுமாவார்.

ஈமக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

335, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். 6227

மணிவாக்கு

அஹிம்சையை அனுட்டிப்பவனுக்குப் பணிவு இன்றியமையாதது.

— சுவாமி சிவானந்தர்

மக்கள் கருத்து

வானொலியில் நேர்முக வர்ணனைகள்

முக்கியமான கோயில் திருவிழாக்கள் - தேர் உற்சவங்கள் போன்றவற்றை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் சில சமயம் நேரடியாகவும் சில சமயம் ஒலிப்பதிவு செய்தும் ஒலிபரப்பி வருவது பாராட்டுக்குரியதுதான். ஆனால் இந்த ஒலிபரப்புக்கள் உரிய முறையில் மக்கள் எதிர்பார்க்கும் அளவில் நடைபெறுகின்றனவா என்பது சிந்திக்குரியதே.

நேரடி வர்ணனை என்பது ஒரு கலை. இதற்கு முறையாகப் பயின்றவர்கள் - அல்லது அனுபவம் உள்ளவர்கள் - பயன்படுத்தப்படவேண்டும். ஆனால் இந்த கோயில் விழாக்களை நேரடி வர்ணனை செய்பவர்கள் பெரும்பாலும் பயிற்சிபெறாதவர்களாகவே இருக்கிறார்கள்.

நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கேட்பவர்கள் நேரில் பார்ப்பதுபோல் எடுத்துக் கூறுவதும் அதன்மூலம் அவர்களை உணர்ச்சி கொள்ளச் செய்வதும் வர்ணனையாளரின் திறமையாக இருக்கவேண்டும். ஆனால் பெரும்பாலான இந்த வர்ணனையாளர்கள் தாமே உணர்ச்சிவசப்பட்டு ஏதோ உருக்கொண்டு உளறுவதுபோல் மூச்சை அடைத்துக்கொண்டு கத்துகிறார்கள்.

அண்மையில் நடைபெற்ற ஒரு நேர்முக வர்ணனையின் போது வர்ணனையாளர் ஒருவர் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் ஏதோ [illegible] பின்வருமாறு கூறினார்.

''இது ஒரு புனிதமான இடம். ஏனென்றால் நேற்றும் கூட 40 மூட்டை அரிசி அவித்து அன்னதானம் செய்யப்பட்டது''

புனிதமான இடம் என்பதால்தான் நேர்முக வர்ணனைக்கே ஏற்பாடு செய்யப்படுகின்றது. அன்னதானம் கொடுப்பதற்கும் புனிதத்துக்கும் என்ன சம்பந்தம்?

செல்வாக்குப் பெற்றவர்களையும் - அதிகாரிகள் தமக்கு வேண்டியவர்களையும் வர்ணனையாளர்களாக அனுப்புவதை விடுத்து புனிதமான இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பொதுமக்கள் கேட்டு அனுபவிக்கவும் - நேரில் பார்ப்பதுபோல் உணர்ந்து உணர்ச்சி பெறவும் செய்யக்கூடிய வர்ணனையாளர்களைப் பயன்படுத்தவேண்டும். இத்துறையில் சக ஒலிபரப்பான சிங்கள சேவையினர் எவ்வளவு அழகாக நிகழ்ச்சிகளைச் செய்கிறார்கள். தமிழ் பகுதியில் ஆட்கள் இல்லையென்றால் திறமைசாலிகளான இளைஞர்களை எடுத்து பயிற்சியளிக்கலாமே.

த. பரமசாமி
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

பழையபூங்கா வீதி திருத்தப்படும்

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறை கரம்பொன் தெற்கு பழைய பூங்கா வீதி திருத்தவேலைகளுக்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஐம்பதினாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வேலையைப் பொறுப்பேற்றுள்ள கரம்பொன் தெற்கு கிராமஅபிவிருத்திச் சங்கத்தினர் மேற்படி வேலையை கூடிய விரைவில் செய்துமுடிக்கத் தீர்மானித்துள்ளனர். (கு)

'இந்தஅரசு எல்லாரையும் சமமாகக் கணித்துசெயல்படுகிறது''

ஊர்காவற்றுறையில் அமைச்சர் தேவா

ஊர்காவற்றுறை

''கடந்தகால அரசாங்கங்கள் எல்லாப் பகுதிகளையும் சமமாகக் கவனிக்கவில்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் ஒன்றும் பயனளிக்கவில்லை. ஆனால் இன்றைய அரசு எல்லாப் பகுதிகளையும் சமமாகக் கணித்து அபிவிருத்தியடைய வழிவகைகளைச் செய்கிறது. தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொண்டிருக்கிறது. இன்றைய அரசாங்கத்தின் நோக்கம் குடிசை வீடுகளில் உள்ளவர்கள் ஒட்டு வீடுகளில் வசதியுடன் வாழவேண்டும் என்பதே. அவற்றை ஏற்படுத்துவதற்காகவே மகாவலி அபிவிருத்தித்திட்டம், சுதந்திர வர்த்தகவலயம் போன்ற நல்ல வழிவகைகளை ஏற்படுத்தியுள்ளது''.

இவ்வாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம் ஊர்காவற்றுறை திறந்தவெளியரங்கில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

3 லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வாடி வீட்டைத் திறக்குமுகமாக யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி விஜேக்கோன், யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திர துரைசுவாமி ஆகியோர் சகிதம் ஊர்காவற்றுறைக்கு வருகை தந்த உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகத்திற்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டு ஊர்காவற்றுறை திறந்தவெளி அரங்கிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சடாட்சர சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அமைச்சர் தேவநாயகம் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது: ''நான் கல்லூரியில் கல்வி கற்ற காலத்திலே யாழ்ப்பாணப்பகுதிக்கு முதலில் தெரிந்த இடம் ஊர்காவற்றுறையே. அப்போது பல உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக நான் இங்கு வந்திருந்தேன்''

''இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் எல்லாப் பொருட்களும் தாராளமாகக் கிடைக்கின்றன. இன்று கியூ வரிசை இல்லை. இன்றைய விலைவாசி உயர்வுக்கு அரசாங்கத்தைக் குறைகூறமுடியாது. விலைவாசி உயர்வுக்குக் காரணம் எரிபொருள் விலையேற்றமே. இதைத் தடுக்க எம்மால் முடியாது. அரசாங்கத்துடன் நாங்கள் ஒத்துழைப்பதன் மூலம் நாட்டை முன்னேற்றுவதற்கே''.

இக்கூட்டத்தில் உரையாற்றிய யாழ்ப்பாண மாவட்ட அமைச்சர் திரு. யு.பி. விஜேக்கோன் ''உள்நாட்டலுவல்கள் அமைச்சர் யாழ். மாவட்ட அபிவிருத்தி அருகிலே இந்த உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருக்கிறார். கடந்தஅரசு அபிவிருத்திவேலைகளை மேற்கொள்வதில் பாகுபாடு காட்டி வந்தது. ஆனால் இந்த அரசு எந்தவிதமான பாகுபாடும் காட்டாமல் சிறந்த முறையில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டுவருகிறது'' என்றார்.

மாவட்ட அமைச்சின் செயலாளரும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி பேசுகையில் ''மக்களின் அடிப்படைத் தேவைகளை அறிந்து அவற்றைப் பூர்த்தி செய்யுமுகமாகவே மாவட்ட அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளது. யாழ் மாவட்டத்தில் மேலும் மேலும் வாடி வீடுகளை அமைக்குமாறு எமக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. மாவட்ட அமைச்சு இத்தொகுதியை ஆராய்ந்து வாடி வீடுகள் அமைக்கத் தகுதியுள்ள இடங்களில் மேலும் இவற்றை அமைக்கும்''.

மற்றும் பலரும் இக் கூட்டத்தில் உரையாற்றினர். இளைப்பாறிய கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரும் ஊர்காவற்றுறை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருமான திரு. நடேசன் நன்றியுரை கூறினார்.

பொதுக் கூட்டத்தையடுத்து வாடி வீட்டைத் திறந்துவைக்கும் பொருட்டு பிரதான வீதி வழியாக அமைச்சர் தேவநாயகமும் மற்றும் மாவட்ட அமைச்சர் அரசாங்க அதிபர் ஆகியோர் வாடி வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இன்று நடைபெறும் பாலர் கலை நிகழ்ச்சி

12பாடசாலைகள் கலந்துகொள்கின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள பாலர் கல்விக் கழக நிர்வாகத்திலுள்ள பன்னிரண்டு பாலர் பாடசாலைகளும் பதின்மூன்றாவது ஆண்டு பெற்றோர் தின விழாவும் பாலர் கலை நிகழ்ச்சிகளும் இன்று மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் திரு. க. செல்லையா தலைமையில் நடைபெறுகிறது. பிரதம விருந்தினர்களாக யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனும் பாரியாரும் கலந்துகொள்வார்கள்.

பாலர் பாடசாலைகளின் கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து செல்வி நிருஞ்ஜனா யோகேஸ்வரனின் பரத நாட்டிய நிகழ்ச்சியும் இடம்பெறும்.

மடுத்திருப்பதியில் அதிக பக்தர்கள்

(மன்னார்)

கடந்த வருடங்களிலும் பார்க்க இவ்வருடம் மடுத் திருப்பதியில் பக்தர்களின் தொகை அதிகமாக இருந்தது.

ரயில் மூலம் வரும் யாத்திரிகர்கள் உடனுக்குடன் ஆலயத்திற்குச் செல்ல பஸ் சேவை திட்டமாக நடைபெற்றது.

யாத்திரிகர்கள் தம்முடன் கொண்டுவந்த பொதிகளை இ. போ. ச. தனி வாகனம் மூலமாக மடுக் கோவிலுக்குக் கொண்டுசென்று கொடுத்தது யாத்திரிகர்களுக்கு பேருதவியாகவிருந்தது. விசேட ரயில் சேவைகளும் பஸ் போக்குவரத்துச் சேவைகளும் நடத்தப்பட்டன.

மடுமாதா ஆலய எல்லைக்குள் மது அருந்தல் தடை செய்யப்பட்டிருந்தது. தடையை மீறி மது அருந்துவோர்மீது கடுமையான தண்டனை விதிக்கப்படுமென ஆலயக் குருக்கள் அறிவித்திருந்தார். நானாட்டான் பல. நோ. கூ. சங்கத்தினரும் முருங்கன் [illegible] நிலையத்தினரும் பக்தர்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களைத் தாராளமாக விநியோகித்தனர்.

வடபகுதி ஆயருக்கு சிறப்பான வரவேற்பு

(மன்னார்)

வடபகுதி ஆயர் அதி வண. கலாநிதி தியோகுப்பிள்ளைக்கு தாழ்வுப்பாடு கிராமத்தில் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது.

மன்னார் பங்குத்தந்தை வண. பிதா பயஸ், தாழ்வுப்பாடு பங்குத் தந்தை வண. பிதா சேப்கா ஆகியோர் வரவேற்பளித்தனர். இவ்வரவேற்பில் கலந்துகொண்டு உரையாற்றிய மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் தமது உரையில்;

''மாணவர்களுக்கு மறைக்கல்வி மிகவும் அவசியமாகும். கத்தோலிக்க ஆசிரியர்கள் மறைக்கல்வியை மாணவர்களுக்குப் போதிப்பதில் ஆர்வம் காட்டவேண்டும்'' என்றார்.

மறைக்கல்வி பரீட்சையில் சித்திபெற்றவர்களுக்கு வடபகுதி ஆயர் அதி வண கலாநிதி தியோகுப்பிள்ளை பரிசில்கள் வழங்கினார்.

நடமாடும் அரசாங்க செயலகம்

(மாவிட்டபுரம்)

வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இம்மாதம் 8ம் திகதி 'நடமாடும் அரசாங்க செயலகம்' செயல்பட இருக்கிறது.

மக்களது குறைகளை நேரில் அறிந்து தீர்த்துவைப்பதற்காக யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நடமாடும் அரசாங்க செயலகங்களை நடத்தி வந்த யாழ் அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி, இம்மாதம் 8ம் திகதி வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் மேற்படி செயலகத்தை செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

அரசாங்க அதிபரும் மற்றும் பல்துறைப்பட்ட அதிகாரிகளும் இச்செயலகத்தில் சமூகமளித்திருந்து மக்களது குறைகளை நேரில் அறிந்துகொள்வார்கள். வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. க. மகேசன் இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளார்.

வேலணை மேற்கு கி. அ. சங்கம்

(வேலணை)

வேலணை மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை மாலை வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் திரு. வை. அருணகிரி தலைமையில் நடைபெறும். இக்கூட்டத்தில் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு ஆ. குணநாயகம், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், வேலணை மேற்கு கிராம சேவை அலுவலர் திரு ந. [illegible] ஆகியோர் கலந்துகொள்வர்.

ஊரெழு கிராம அபிவிருத்தி சங்கம்

ஊரெழு கிராம அபிவிருத்திச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் ஊரெழு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் திரு. இ. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

கிராம அபிவிருத்திச் சங்க உத்தியோகத்தர் திரு. என். தியாகராசா, கிராம சேவை அலுவலர் திரு கிருஷ்ணராசா ஆகியோர் உரையாற்றினர். சங்கத்தின் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டவர்கள் விபரம்: தலைவர்: இ. கிருஷ்ணபிள்ளை, உப தலைவர்கள்: த. தம்பிராசா, க. சின்னத்துரை. செயலாளர்: இ. சேதுராசா, பொருளாளர் க. பரமநாதன். 7 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

தலைமன்னார் இறங்குதுறை நவீனமயப்படுத்தப்படும்

இருபது லட்சம் ரூபா ஒதுக்கீடு

(மன்னார்)

தலைமன்னார் இறங்குதுறை விரைவில் நவீனமயப்படுத்தப்படும். இதற்கென சுங்க இலாகா 20 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

பிரயாணிகளதும், உத்தியோகத்தர்களதும் நலனுக்காக தலைமன்னார் துறைமுகம் நவீனமயப்படுத்துவது அவசியம் என்று மன்னார் அரசாங்க அதிபர் திரு. உமிலஸ் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அண்மையில் [illegible] கிராமாட்சிமன்ற மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் மன்னார் அரசாங்க அதிபர் திரு உமிலஸ் பெர்னாண்டோவும் கலந்துகொண்டார்.

இக்கருத்தரங்கில் உதவி அரசாங்க அதிபர், புகையிரதப் பகுதி பொலிஸ் சுங்க இலாகா உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். தலைமன்னார் இறங்குதுறையில் உள்ள குறைபாடுகளை தலைமன்னார் உதவி [illegible] அத்தியாவசியமான எடுத்துக்கூறினார். தண்ணீர், மின்சாரம், பாதுகாப்பு என்பன முக்கியமாக எடுத்துக்கூறப்பட்டது.

மன்னார் அரசாங்க அதிபர் திரு. உமிலஸ் பெர்னாண்டோவும், உயர் அதிகாரிகளும் தலைமன்னார் இறங்குதுறையில் உள்ள குறைபாடுகளை நேரில் சென்று பார்வையிட்டனர். இங்குள்ள குறைபாடுகள் விரைவில் நிவர்த்திசெய்யப்படுமென உறுதியளித்தனர்.

பாகிஸ்தானுடன் உறவுகளை மேம்படுத்த பாரதம் தயாராகவுள்ளது

புதுடில்லியில் அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 4

பாகிஸ்தானுடன் இருதரப்பு உறவுகளை மேம்படுத்த பாரதம் தயாராகவுள்ளதாக இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.

சிம்லா உடன்படிக்கையில் உடன்செய்திருப்பதற்கு ஏற்ப இருநாடுகளுக்குமிடையிலுள்ள உறவுகளை வலுப்படுத்தவேண்டுமென்று இந்தியா மேலும் தெரிவித்துள்ளது.

ஆசியப் பிரதேசங்களில் [illegible] செலுத்தும் நோக்குடன் சீனாவும் அமெரிக்காவும் பாகிஸ்தானுக்கு உதவ முயற்சிப்பது பற்றி எச்சரிக்கையாக இருக்கும்படியும் அது பாகிஸ்தானைக் கேட்டுள்ளது. சிறு [illegible] பஞ்சசீல உடன்படிக்கையின் அடிப்படையில் இந்தியாவுடன் உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளலாமென்றும் இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது. (வெ)

தென்கொரியாவில் சதி முயற்சி

36 பேர் தடுப்புக்காவலில்!

சோல், ஜூலை 4

[illegible] தென்கொரிய அரசியல் பிரமுகரும், ஜனாதிபதி பதவிக்கு முன்னர் ஒருதடவை போட்டியிட்டவருமான திரு. [illegible] ஜோங் தென்கொரிய அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான சதிமுயற்சியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் [illegible] கைதுசெய்யப்பட்டிருந்தார்.

[illegible] இராணுவச் சட்டத்தின் கீழ் விசாரணை தொடரப்படுமென்று தென்கொரிய இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் பட்சத்தில் திரு. [illegible] ஜோங்குக்கு மரண தண்டனை விதிக்கப்படலாமென்றும் அவ் அதிகாரி கூறினார்.

திரு. இம்முடன் 36 பேர் கடந்த மே மாதம் தென்கொரியாவில் இராணுவச் சட்டம் அமுல்செய்யப்பட்ட [illegible] தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சீன - பிரான்ஸ் கூட்டுமுயற்சி

பீகிங், ஜூலை 4

சீனாவும் பிரான்சும் கூட்டு முயற்சியில் ஹெலிகொப்டர் விமானங்களைத் தயாரிக்கவுள்ளன என்று நவசீன செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

கராச்சியில் வயிற்றோட்டம்: 13 பேர் மரணம்

கராச்சி, ஜூலை 4

கராச்சியில் ஏற்பட்ட ஒருவித வயிற்றோட்ட நோய் காரணமாக இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

குடிநீர் மூலமாகவே இந்நோய் பரவிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வெ)

பாரத - யு. எஸ். உறவுகள்

புதுடில்லி, ஜூலை 4

பாரதத்திற்கும் அமெரிக்காவுக்குமிடையிலான உறவுகள் தொடர்ந்தும் வலுப்பெறும்.

இவ்வாறு இந்திய ஜனாதிபதி திரு. சஞ்சீவ ரெட்டியும், பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தியும் நேற்று நடைபெற்ற அமெரிக்காவின் 204 வது சுதந்திர தினத்தை ஒட்டி அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளனர். [வெ]

—

ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் செனட்டரும், தெங்கு உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சமாஜத் தலைவருமாயிருந்த அமரர் ஜி. நல்லையாவின் [illegible] நினைவுநாளை முன்னிட்டு? முகமாக ஓர் ஆலோசனைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் [illegible] இல் நடைபெறவிருக்கிறது. திருவாளர்கள் ஜே. ஞானப்பிரகாசம், எம். ஜி. சுப்பிரமணியம், எட். எல். அலெக்சாண்டர், கே. நடராசா, கே. செல்லத்துரை, எம். எஸ். சின்னத்தம்பி ஆகியோர் உரையாற்றுவர். [ஈ]

அமெரிக்க சுதந்திர தினத்தில்

மனித உரிமைகளை சகலருக்கும் உறுதிப் படுத்துவோம்!

கார்ட்டர் அறைகூவல்

வாஷிங்டன், ஜூலை 4

சகலருக்கும் மனித உரிமைகள் என்பதில் அமெரிக்கா மேற்கொண்டுள்ள உறுதியான பொறுப்புக்குச் சகலரும் தம்மை மீள அர்ப்பணிக்க வேண்டும்.

இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் அமெரிக்க சுதந்திர தினத்தின் 204வது ஆண்டு நிறைவையொட்டி வெளியிட்ட செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் அச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது, சுதந்திர தினத்தைக் கௌரவிக்கும் அமெரிக்கப் பிரஜைகள் சகலரும் [illegible] நாட்டின் மூலாதாரக் கோட்பாடுகளை மீண்டும் உறுதி செய்து [illegible].

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தினம் அளிக்கும் பல ஞாபகார்த்த நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் தேசாபிமானமும் பெருமையும் மிக்க [illegible] அமெரிக்கப் பிரஜைகள் சகலருடனும் ரோசலினும் நானும் [illegible].

சகலருக்கும் மனித உரிமைகள் என்பதில் இந்நாடு மேற்கொண்டுள்ள உறுதியான பொறுப்புக்கு மீள அர்ப்பணிப்பதிலும், நமது நாட்டின் மூலாதாரக் கோட்பாடுகளை மீண்டும் உறுதி செய்வதிலும் நாம் உங்களுடன் பங்கு [illegible]றோம். இந்த [illegible]யொட்டி இடம்பெறும் ஒவ்வொரு விசேட நிகழ்ச்சியும் நடவடிக்கையும் புத்துணர்ச்சியையும், நிலைத்த நினைவுகளையும், மகிழ்ச்சியையும் தருவதாகவும் என்று நம்புகிறோம்.

அமெரிக்க - இலங்கை

பரஸ்பர உறவுகளில் இருதரப்பும் அக்கறை

(கொழும்பு)

ஜனநாயகத்துக்கு ஆதாரமாக விளங்கும் பண்புகளுக்கும், நடைமுறைகள், பழக்க வழக்க மரபுகள் சம்பந்தப்பட்ட பொதுவான பொறுப்பு மனிதர்களின் உரிமைகளின் மீதும் நல்வாழ்வின் மீதும் கொண்டுள்ள [illegible] அக்கறையும் மற்றும் ஆகிய இரு அம்சங்களும் இணைந்து இலங்கைக்கும் அமெரிக்காவிற்குமிடையிலான பரஸ்பர நன்மை பயக்கும் உறவுகளுடன் கூடும் புதிய நடவடிக்கைகளுக்கு ஓர் உறுதியான அத்திவாரமாக அமைகின்றன.

மேற்கண்டவாறு இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் திரு டொனல்ட் ஆர் [illegible] அமெரிக்கச் சுதந்திரதினத்தின் 204 ஆண்டு நிறைவை முன்னிட்டு விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் அச்செய்தியில் மேலும் கூறியுள்ளதாவது ஓர் [illegible] வகையிலும் [illegible] வகையிலும் நமது இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை வலுவடையச் செய்ததுடன் மீண்டும் உறுதியாகவும் மேலும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதில் அமெரிக்கா நம்பிக்கையும் உறுதியும் பூண்டுள்ளது.

மகாவித்தியாலயமாக உயர்வு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் [illegible] இராமகிருஷ்ண வித்தியாலயம் இம்மாதம் தொடக்கம் மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டுள்ளது. திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) இதன் அதிபராகக் கடமையாற்றுவது குறிப்பிடத்தக்கது.

அணு ஆயுத உற்பத்தியைத்தடுக்க

சோவியத் தீர்க்கமான முடிவு எடுத்துள்ளதாம்

மே. ஜேர்மன் அதிபர் கூறுகிறார்

பொன், ஜூலை 4

ஐரோப்பாவில் அணு ஆயுத உற்பத்தி போட்டியைத் தடுப்பதற்கு சோவியத் யூனியன் தீர்க்கமான முடிவை எடுத்துள்ளது என்று மேற்கு ஜேர்மன் அதிபர் ஹெல்மட் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

மாஸ்கோவில் ஜனாதிபதி பிரஷ்னேவுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்பு நாடு திரும்பிய திரு ஸ்மிட் பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது அணு ஆயுத உற்பத்தி சம்பந்தமாக அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு கிரெம்ளின் தயாராக இருக்கிறதென்று அறிவித்தார்.

[illegible] பிரெஞ்சு அதிகாரிகள் [illegible] குறிப்பிடத்தக்க [illegible] ஏற்படுமென்று கூறுவதாகத் தெரிவித்தனர்.

சோவியத் ஜனாதிபதி பிரஷ்னேவ் தென்கிழக்காசிய விவகாரங்களில் கிரெம்ளினும் வியட்நாமும் [illegible] கொள்கையை பின்பற்றி வருகின்றன என்றும் [illegible] அமெரிக்காவும் சீனாவும் காரணமென்று குற்றம் சாட்டினார். வெளிச்சக்திகளின் தலையீட்டினால் தான் தென்கிழக்காசியப் பிராந்தியங்களில் கலவரங்கள் ஏற்பட்டுள்ளனவென்றும் அவர் கூறினார். (ட)

அணுபரிசோதனையை தடைசெய்யும் மும்முனைப் பேச்சு

லண்டன், ஜூலை 4

பிரிட்டனும் அமெரிக்காவும் அணு பரிசோதனையைத் தடைசெய்யும் முக்கூட்டுப் பேச்சுவார்த்தைகளை நடத்த இணங்கியுள்ளன.

இப் பேச்சுவார்த்தைகளை விரிவான அடிப்படையில் மேற்கொள்வதற்கு சோவியத் யூனியன் ஆதரவு தெரிவித்துள்ளது.

1963ம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை அணுப்பரிசோதனையை பூரண தடைசெய்வதற்கான உடன்படிக்கையாக மாற்றுவதற்கு இம் மூன்று நாடுகளும் ஜெனிவாவில் [illegible] ஆராயவுள்ளன. (வெ)

கடந்த 30 ஆண்டு காலமாக

சீன பொருளாதாரம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாம்

பீகிங், ஜூலை 4

சீன அரசாங்கம் கடந்த 30 வருடங்களாகப் பின்பற்றப்பட்டுவரும் பொருளாதாரக் கொள்கைகளைக் கண்டித்துள்ளது.

சீனாவின் பொருளாதார அபிவிருத்தியைக் கருத்திற் கொள்ளாது கவர்ச்சிகரமான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவென்று அது தெரிவித்துள்ளது.

திட்டமிடல் வகுப்பதற்கு முன் பொருளாதாரப் பெறுபேறுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டுமென்று அது மேலும் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 30 வருடங்களாக சீனாவில் பொருளாதாரத்துறை புறக்கணிக்கப்பட்ட காரணத்தினால் அநேக பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டுள்ளனவென்றும் சீன [illegible] தெரிவித்துள்ளது. (வெ)

கர்ப்பிணிப் பெண் கொலைச்சம்பவம்:

3-வது சந்தேகநபருக்குப்பிணை மற்றும் இருவர் ரிமாண்டில்

(யாழ்ப்பாணம்)

வசாவிளான் கர்ப்பிணிப் பெண் கொலைச் சம்பவம் தொடர்பாக ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த 3வது சந்தேக நபரான வல்லி சிவராசா 500 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேக நபர்களான வல்லி தவராசா, செல்லர் செல்வமணி, வல்லி சிவராசா ஆகியோர் ஆஜர் செய்யப்பட்டனர்.

வல்லி தவராசாவின் [illegible]யான 8 மாதகர்ப்பிணி கொலைச் சம்பவம் தொடர்பாக இம் மூன்று சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் ரசாயன பகுப்பாளர் அறிக்கை வரும்வரை 1ம், 2ம் சந்தேக நபர்கள் சார்பில் தான் எதையும் வலியுறுத்தவில்லையென்றும், 1ம் சந்தேக நபரின் சகோதரரான 3ம் சந்தேக நபர் [illegible] எவ்வித சாட்சியமுமின்றி ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளாரென்றும் ஆதலால் அவரை விடுதலை செய்யுமாறும் அல்லது பிணையில் செல்ல அனுமதிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

[illegible] போதிய விசாரணை அதிகாரிக்குக் காட்டுவது மட்டுமே 3-ம் எதிரிக்கு எதிராக உள்ள சாட்சியமென்றும், சட்டத்தரணி சபாரத்தினம் தெரிவித்தார்.

நீதவான் 3ம் சந்தேகநபரை 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து 1, 2 சந்தேக நபர்களை இம்மாதம் 9ம் திகதி வரை ரிமாண்டில் வைக்க உத்தரவிட்டார். (

நாகம்ஸ் [illegible]
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
[illegible]
ரத்தத்தின் ரத்தமே

ஹரன் [illegible]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயகுமாரி
குங்குமம்
புதிய பிரதி)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
OLIVER REED in
TRIPLE ECHO (Color)
11-ந் திகதி முதல் ஜஸ்டிஸ் கோபிநாத்

வெலிங்டன்
[யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்-படாபட்
6-ல் இருந்து
60 வரை

லிடோ
[யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி-சுஜாதா-[illegible]
ஞானக்
குழந்தை

கலையுலகில் புரட்சி. சரித்திரச் சிகரத்தில்
கொடிகட்டிப் பறக்கும் சாதனைபடம்!
யாழ். வின்ஸர் வெண்திரையில்
100 வது நாளைத் தாண்டி வெற்றி முழக்கமிட்டு அன்றும் இன்றும் முறியடிக்க முடியாத வகையில் வசூலில் இன்னும் முன்னணியில் நின்று மலர்ந்த வண்ண மிருக்கின்றது.
பாரதிராஜாவின்
நிறம் மாறாத பூக்கள்
[வண்ணப்படம்]

RAJAH (JAFFNA)
Daily 10-30, 2-30, 4-45, 7-15 & 9-45
PAUL VICTOR'S BEST SELLER
NOW A MAJOR E. M. I. FILM
From the depth of space they came to vanish beneath the sea.........An Action packed under sea adventure, as you have never seen before!
DOUG Mc CLURE with PETER GILMORE
in
WAR LORDS OF
ATLANTIS
(More Suitable for adults)
(NO PASSES)

ஜனத்திரள் நிறைந்த 2-வது வாரம்
SANTHI JAFFNA Phone 7642
Daily 5 Shows
LAST DAY — 6-7-80
RODDY Mc DOWALL—KABIR BEDI
"THE THIEF OF BAGHDAD"
வீரதீர செயல்கள், வாள்வீச்சு, குதிரை ஓட்டங்கள் மந்திரஜாலங்கள், பறக்கும் கம்பளம் யாவையும் குளுகுளு வர்ணத்தில் முழுக் குடும்பமும் கண்டு களியுங்கள்.
7-7-80 "LET'S DO IT AGAIN" color-comedy

மகத்தான 10-வது வாரம்
ராணி (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
✱ [illegible] ✱ [illegible]
கல்யாண ராமன் [illegible]

ஸ்ரீதர் கடைசி 2 தினங்கள்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஞான ஒளி
From 7th
Day of the Animals

இன்றைய பலன்

ஆனி மாதம் 21-ந் திகதி

[சனிக்கிழமை]

[5-7-1980]

மேடம்: பொருளீட்டும் துறையில் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம். அயலவர்களின் சிரிப்பு உங்களைப் பரவசப்படுத்தும். குடும்ப வாழ்க்கையில் சமரசம் நிலவும். உங்கள் பேச்சுக்கு மற்றவர்கள் பெரும் மதிப்புக் கொடுப்பர்.

இடபம்: திட்டமிட்டுச் செயல்பட விரும்புவீர்கள். எனினும் பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு. நண்பர் ஒருவர் உமது நலனைக் கெடுப்பதற்கு முனைவர். உடலில் சோர்வுக்கு இடமேற்படும். சிலர் வாதரோகத்தினால் பீடிக்கப்படுவர்.

மிதுனம்: தொழில் வளர்ச்சியில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு. கல்வித் துறையில் முன்னேற்றம் தென்படும். அதிகாரிகள் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

கடகம்: புத்திக் கூர்மையுடன் புதிய எண்ணங்களும் தலைதூக்கும். புத்திரர்களால் புகழும் கிடைக்கும். இறை நம்பிக்கையுடன் இல்லத்தில் இனிமை தவழும்.

சிங்கம்: கழுகுப் பார்வை உங்களை வட்டமிடும். எதிரிகள் காத்திருப்பர். ஆயுத பீடைக்கும் இடமிருக்கலாம் எதிலும் அவதானம் தேவை.

கன்னி: காதலர்களுக்கு கலகலப்பான தினம். பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும். இல்லத்தில் இனிமையான சம்பவங்கள் இடம்பெறும். இன்று சுபதினம்.

துலாம்: உங்கள் வீட்டிலே பல பூசல்கள் தோன்றக்கூடும். அடக்கம் வேண்டும்.

விருச்சிகம்: தம்பதிகள் நிழலாட்டம் உங்களைத் தொடரும். சிறிய தலையிடிக்கு இடமுண்டு.

தனுசு: கற்றதனால் பயன் இன்று கைமேல் கிடைக்கும். நுட்பமான வேலைகளில் ஈடுபடுபவர்கள் பேசப்படுவார்கள்.

மகரம்: உழைப்பிலே முன்னேற்றம் ஏற்படும். வியாபாரத்துறையில் விருத்தியுண்டு, தாய்வழிப் பொருள் வரவுக்கும் இடமுண்டு. உயர் கல்வியில் ஈடுபடுபவர்களுக்கு உற்சாக தினம்.

கும்பம்: கண்துடைப்பு வேலை நடைபெறும். கால்நடைகளினால் நஷ்டமுண்டு. குடும்பத்தில் உறவுமுறை திருப்தியற்றதாக இருக்க மாட்டாது. மூத்த சகோதரத்தின் நடவடிக்கை வேதனையைத் தரும். கட்டமான தினம்.

மீனம்: தானதானிய நட்டத்துடன் பூமிப் பிணக்கும் தோன்றக்கூடும். வேண்டியவர் ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடும். கடமை பார்க்குமிடத்தில் நிதானம் தேவை. மௌனம் நன்று.

சோதிடக்கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

இடமாற்றம்

[மாவிட்டபுரம்]

பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் கடமை புரிந்த சப் இன்ஸ்பெக்டர் திரு. வி. இரத்தினசபாபதி காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். [அ]

[illegible] [illegible]
தினசரி 6-30, 9-30
[illegible]
கற்பூரம்

17 வயதுக் குட்பட்டோருக்கான

கிரிக்கட் போட்டியில்

பரியோவான் கல்லூரி வெற்றி

[அரியாலை]

யாழ் பரியோவான் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற 17 வயதுக்குட்பட்டவர்களுக்கான கிரிக்கட் போட்டியில் பரி. யோவான் கல்லூரி இனிங்சாலும் 8 விக்கட்டுகளாலும் 38 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டி 2 விக்கட்டுகள் நஷ்டத்திற்கு 219 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. துடுப்பெடுத்தாடிய செல்வன் நிர்மலன், செல்வன் அஜித் ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 115, 74 ஓட்டங்களையும் பெற்றனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி தனது முதலாவது ஆட்டத்தில் எல்லா விக்கட்டுக்களையும் இழந்து 80 ஓட்டங்களையும், இரண்டாவது ஆட்டத்தில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 101 ஓட்டங்களையும் பெற்றது.

இவர்களை எதிர்த்துப் பந்து வீசிய பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டியைச் சேர்ந்த செல்வன் தெய்வேந்திரா முதலாவது ஆட்டத்தில் 18 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கட்டுகளையும், இரண்டாவது ஆட்டத்தில் 21 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கட்டுகளையும் செல்வன் வின்னபாலன் 36 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

யாழ். இந்துக் கல்லூரிக்கும், யாழ். பரி. யோவான் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் புள்ளிகள் அடிப்படையில் பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டி வெற்றியீட்டியது.

முதலாவது முறையாகத் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி 9 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 230 ஓட்டங்களைப் பெற்று தன் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

இதனைத்தொடர்ந்து விளையாடிய பரி. யோவான்கல்லூரி 6 விக்கட்டுகளை இழந்து 211 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

இந்துக்கல்லூரிக் கோஷ்டியில் துடுப்பெடுத்தாடிய செல்வன் வை ஜெயந்தன் 63 ஓட்டங்களைப் பெற்றார். இக் கோஷ்டியை எதிர்த்துப் பந்து வீசிய செல்வன் பாஸ்கரன் 20 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்.

பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டியில் துடுப்பெடுத்தாடிய செல்வன் என் நிர்மலன் 71 ஓட்டங்களையும் செல்வன் அஜித் 56 ஓட்டங்களையும் பெற்றனர். இக்கோஷ்டியை எதிர்த்துப் பந்து வீசிய செல்வன் து. ஸ்ரீதரன் 42 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும் கைப்பற்றினார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரிக்கும், யாழ் பரி. யோவான் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் புள்ளி அடிப்படையில் பரி. யோவான்கல்லூரிவெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எல்லா விக்கட்டுகளையும் இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றது. பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டி 6 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 204 ஓட்டங்களை பெற்றது. ஸ்கந்தவரோதயாக் கல்லூரி தனது இரண்டாவது ஆட்டத்தில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது.

பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டி தனது இரண்டாவது ஆட்டத்தில் ஒரு விக்கட்டையும் இழக்காமல் 7 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை முடித்துக்கொண்டது.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் சார்பில் துடுப்பெடுத்தாடிய செல்வன் சி. ராஜநந்தன் முதலாவது ஆட்டத்தில் 37 ஓட்டங்களையும், செல்வன் ஜெககுமார் இரண்டாவது ஆட்டத்தில் 60 ஓட்டங்களையும் பெற்றனர்.

இவர்களை எதிர்த்துப் பந்து வீசிய பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டியைச் சேர்ந்த செல்வன் தெய்வேந்திரா 43 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும் செல்வன் அமுரீஸ்ராஜ் 12 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும் கைப்பற்றினர். இரண்டாவது ஆட்டத்தில் செல்வன் வின்னபாலன் 58 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்.

பரி. யோவான் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் அஜித் ஆட்டமிழக்காமல் 66 ஓட்டங்களையும், செல்வன் ஞானரட்ணம் ஆட்டமிழக்காமல் 45 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஸ்கந்தவரோதயா இல்லப் போட்டி

[யாழ்ப்பாணம்]

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு. சி. தியாகராசா தலைமையில் நடைபெறும்.

இப் போட்டியில் பிரதம விருந்தினராக டாக்டர் இ. ஆனந்தராசா கலந்துகொள்வார். [வே]

0 0 0

யாழ்ப்பாணக் கல்லூரி

[வட்டுக்கோட்டை]

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு. ராஜன் கதிர்காமர் தலைமையில் நடைபெறும்.

இப்போட்டியில் பிரதம விருந்தினராக பிரதம பொறியியலாளர் திரு. எஸ். பஞ்சாட்சரவேல் கலந்துகொள்வார். திருமதி பஞ்சாட்சரவேல் பரிசில்களை வழங்கு

சேவைக்கு இலக்கணமான பெரியார்

யாழ்ப்பாண மாநகர பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் தலைவரும் இளைப்பாறிய சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் யாழ்ப்பாணத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரனின் அந்தரங்க செயலாளருமாகிய திரு. பூலோகசிங்கம் குமாரசாமி நேற்று திடீரென காலமாகிய செய்தி யாழ்ப்பாண மக்களை சோகத்தில் ஆழ்த்திவிட்டது.

நேர்மை - உண்மை - மக்கள் சேவை என்பதன் எடுத்துக்காட்டாக விளங்கிய திரு. பூ. குமாரசுவாமி யாழ் மக்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்த ஒரு பெரியார்.

இவர் கல்முனை, திருகோணமலை, வவுனியா, மன்னார், கொழும்பு ஆகிய இடங்களில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக கடமையாற்றி "சேவை" என்பதன் மறு இலக்கணமாகத் திகழ்ந்தார். இவர் யாழ் சம்பத்திரிசியார் கல்லூரியில் தனது ஆரம்ப படிப்பை முடித்தபின் பல்கலைக்கழக கல்வி பெற்றார். இவர் இலங்கையின் சிறந்த டென்னிஸ், கிரிக்கட் வீரராக திகழ்ந்து பெரும் புகழ் பெற்றவராவார்.

அமரர் குமாரசாமியின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தேன் சிந்தும் ஐஸ்கிறீம்!
மூறும் வீட்டுக்கு எடுத்துச் செல்வதற்கு பமிலி புளொக் ஐஸ்கிறீம் வழங்குகிறோம்.
றிக்கோ கூலரிங்ஸ் கிறீம் ஹவுஸ்
யாழ்ப்பாணம். போன்: 464, 7889.

றிக்கோவுக்கு வேறு கிளைகள் இல்லை

ஈழநாடு ELANAADU 50 சதம்

எம்.ஜி.ஆரின் சாரதி விபத்தில் மரணம்

(சென்னை

தமிழக முதல் அமைச்சர் திரு. எம் ஜி. இராமச்சந்திரனின் கார்ச்சாரதி திரு. கோவிந்தன் லொறி - ஜீப் விபத்தில் பலியானார்.

திரு. கோவிந்தன் பொலிஸ் ஜீப் ஒன்றில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட விபத்தில் 6 பொலிஸார் படுகாயமடைந்தனர்.

எம் ஜி ஆரின் தலைமையில் அ தி மு க தலைமை அலுவலகத்தில் அன்னாரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. (இ)

இ. தொ. க. உபதலைவர் காலமானார்

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உப தலைவர் திரு. எம் அருணாசலம் நேற்றுக் காலமானார்.

தமிழ்நாடு சட்டசபையின் உறுப்பினரான திரு. எம். திருபாறனின் சகோதரரான இவரது இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறவிருக்கின்றன. (உ)

'பஸ் நிலையத்தில் கமலத்தின் பின்னால் ஒரு வாலிபர் நின்றார்'

அவர்தான் 2ம் எதிரி என்று நிச்சயப்படுத்திக்கொண்டேன்

வல்வை லோகநாதன் சாட்சியம்

— கா. யோகநாதன் —

(யாழ்ப்பாணம்

ரியூட்டரி முடிந்து கமலம் பஸ்ஸில் செல்லும் போது அவரைப் பார்ப்பதற்காக வாரத்தில் 3 நாட்கள் அவருடன் பஸ்ஸில் பிரயாணம் செய்வேன். இப்படி சுமார் 7 மாத காலம் அவரைப் பார்ப்பதற்காக அவருடன் பஸ்ஸில் சென்றேன்

ரியூட்டரி மாணவி கொலை வழக்கில் 12-வது நாளாகச் சாட்சியமளித்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தி லோகநாதன் மேற்கண்டவாறு கூறினார்

இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் கே. எஸ் மகேசன் முன்னிலையில் நேற்று நான்காவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் ஆனை[illegible] தான் [illegible]த்தில் 80 ம் ஆண்டு மார்ச் 21-ம் தேதி பொலிகண்டி ரியூட்டரி மாணவியான கமலத்தைக் கொலை செய்ததாகவும் அவரின் 3600 ரூபா பெறுமதியான தங்க நகைகளை அபகரித்ததாகவும், இராஜன் அல்லது ராஜ்குமார், பொ[illegible] பஸ் கொண்டக்டரா ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது

திரு லோகநாதன் நேற்றுத் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது!

21 ம் திகதி மாலை கமலம், 1-ம் எதிரியுடன் பஸ்ஸிலிருந்து இறங்கிச் சென்றார். டைம் கீப்பர் காரியாலய வாசலில் கமலத்தைத் தனிய விட்டுவிட்டு அவர் 2-ம் எதிரி வாலிபர்களுடன் நின்ற இடத்திற்குச் சென்றார்

சுவிங்கம் இரண்டும் மடியில் இருந்தது

என்னுடன் பஸ்ஸில் கமலம் வருவார் என நான் எதிர்பார்த்தேன் கமலத்திற்காக வாங்கிய சுவிங்கம் இரண்டும் என் மடியில் இருந்தது அதனை கமலத்திற்கு கொடுக்கக் காத்திருந்தேன்

1-ம் எதிரியின் சட்டத்தரணி ஏ. பி சபாரத்தினம் குறுக்கு விசாரணை செய்தார்

சட்: 3 கடிதங்களை கமலத்திற்கு எழுதினீர் ?- ஆம்.

சட்: பதில் வரவில்லை ஆம்

சட்: பிறகு ஏன் எழுதவில்லை? படிக்கப்போறதாகச் சொன்னா

நீதவான்: ஒன்றும் 3 முறை தான் பொறுக்கும் அதைப் போல் நீர் 3 கடிதத்துடன் நிறுத்தி விட்டீர்? - ஆம் சிரிப்பு!

நீதவான்: கமலம் 1-ம் எதிரியுடன் எங்கே கதைத்துக் கொண்டிருந்தார்? டைம்கீப்பர் ஆபீஸ் வாசலில்

நீதவான்: அந்த இடத்திற்கும் வாலிபர் நின்ற இடத்திற்கும் எவ்வளவு தூரம்? 35 அடி.

நீதவான்: அந்த வாலிபர் கூட்டத்தில் 2-ம் எதிரியும் பரமலிங்கமும் இருந்தனர்? ஆம்

நீதவான்: கமலம் என்ன செய்து கொண்டிருந்தார்? புத்தகங்களை பார்த்துக்கொண்டிருந்தார்.

என் எண்ணம் எல்லாம் கமலத்தின் மீதே

நீதவான்: 1-ம் எதிரி கமலத்துடன் பஸ்ஸில் இருந்து கதைத்தாரா? ஆம்

நீதவான்: அந்த பஸ்ஸில் வேறு ஆட்கள் இல்லையா? இல்லை நான் 2-ம் எதிரியையும் மற்றவர்களையும் அந் நேரம் கவனிக்கவில்லை. என் எண்ணமெல்லாம் கமலத்தின் மீதும் பார்வையெல்லாம் அவர் இருக்கும் இடத்திலும் தான் இருந்தது.

சட்: உமது பஸ்ஸில் கூட்டம் இருந்ததா? ஆம்

சட்: கமலமும் 1-ம் எதிரியும் இருந்த பஸ்ஸில் கூட் இல்லை? ஆம்.

சட்: 1-ம் எதிரி பக்கத்திலிருந்தபோது எப்படி கமலத்திற்கு கைகாட்டினீர்? அச்சமயம் 1-ம் எதிரி என் பக்கம் பார்க்கவில்லை.

சட்: 7 மாதகாலமும் கன்டோஸ் சொக்கிலட், சுவிங்கம் கமலத்துக்கு கொடுத்தீர்? ஆம்

2-ம் எதிரியின் சட்டத்தரணி ஆர். ஸ்ரீ சிவாயா குறுக்கு விசாரணை செய்தார்.

சட்: 2 பேர் கரைச்சல் கொடுப்பதாக கமலம் எப்போ சொன்னார்? சம்பவ தினத்திற்கு 1 மாதத்திற்கு முன்பு.

சட்: பரமலிங்கத்தை உமக்கு கமலம் எப்போ காட்டினார்? சம்பவத்திற்கு 2 கிழமைக்கு முன்பு.

சட்: மற்ற வாலிபரை எப்படி தெரியும். பரமலிங்கத்தைக் காட்டிய 3 நாட்களுக்குப் பின்னர். பருத்தித்துறை பஸ் நிலையத்தில் கமலத்தின் அருகே நிற்கும்போது அவர்தான் 2 ம் எதிரியென நிச்சயப்படுத்திக்கொண்டேன்

சட்: 2-ம் எதிரியின் பெயர் எப்படி தெரியும்? பொலிஸ் நிலையத்தில் 2 ம் எதிரியைப் பொலிசார் காட்டி வந்து இவரைத் தெரியுமா? என்று கேட்டார்கள். அப்போது தெரியும்.

பொலிஸ் நிலையத்தில் என்னையும் விசாரணைக்காக 6 நாட்கள் பொலிசார் அடைத்து வைத்திருந்தனர். அப்போது தான் 2 ம் எதிரியின் பெயர் தெரியும்.

சப் இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதிதான் 2 ம் எதிரியைக் காட்டி இவரைத் தெரியுமா என்று கேட்டார். பொலிசில் வாக்குமூலம் அளிக்கும்போது 2 ம் எதிரி மூனைப் பெடியன் என்று தெரியும். (க-தி)

ரியூட்டரி......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற் பாதுகாப்பு வழங்கப்படு மென்றும் நீதவான் கூறினார்.

71 சாட்சிகளுக்கும் பாதுகாப்பு

தேவையானால் 71 சாட்சிகளுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படுமென்றும் நீதவான் கூறினார்

சாட்சியான லோகநாதனுக்கு வீடு செல்வதற்கு பொலிஸ் பாதுகாப்பு அளிக்குமாறு நீதவான் பருத்தித்துறை இன்ஸ்பெக்டருக்கு கட்டளையிட்டார்.

சாட்சிகளில் ஒருவரான பரமலிங்கத்தை அழைத்து எதிரிகளின் ஆட்கள் வழக்கைப்பற்றிக் கதைத்தால் அதை உடன் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்றும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் நீதவான் எச்சரித்தார்.

(கடந்த புதன்கிழமையும் நேற்றும் சாட்சியமளித்தவர் திருநடராசா லோகநாதன் என்பவரே. அவருடைய பெயர் யோகநாதன் அல்ல)

பண்டிதரின் நூல் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

பண்டிதர் கா. பொ. இரத்தினம் எம். பி எழுதிய "[illegible] மன்னும் சுட்ட மன்னும்" நூல் அறிமுக விழா [illegible] மண்டபத்தில் இன்று பிற்பகல் 6-30 மணிக்கு நடைபெறும்

திரு. [illegible] தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பாராளுமன்ற உறுப்பினர்கள் வி. தருமலிங்கம், வே. யோகேஸ்வரன், வெ. இராசலிங்கம், மு. சிவசிதம்பரம் ஆகியவர்களும் கலந்துகொள்வார்கள். பண்டிதர் [illegible] இராசையா நூலை அறிமுகம் செய்வார்.

'ஊர்காவற்றுறை அபிவிருத்திக்கு

யாழ் மாவட்ட அமைச்சு பல தீர்மானங்களை வகுத்துள்ளது

வாடி வீடு திறப்பு விழாவில் அரசாங்க அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைப் பகுதியிலே பல அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டுமென்று யாழ் மாவட்ட அமைச்சு பல தீர்மானங்களைக் கொண்டிருக்கின்றது. இத்தீர்மானங்களில் ஒன்றே, இங்கே [illegible] அமைந்துள்ள வாடி வீடாகும். இந்த வாடிவீடு அமைக்கப்பட வேண்டுமென்ற முடிவை எடுத்து, குறுகிய காலத்திற்குள் இதைக்கட்டி முடிக்க, மாவட்ட அமைச்சு எடுத்த ஊக்கத்திற்கு இப்பகுதி மக்கள் தம்மை நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள். மகிழ்ச்சியுடன் [illegible] அதே வேளையில் [illegible] வகையில் இந்த வாடிவீடு செயற்படும் என நான் நம்புகிறேன்.

அமைச்சர். திரு. தேவநாயகம் யாழ். மாவட்டத்திற்கு வருகை தந்திருப்பது எமக்கு மகிழ்ச்சி தருவதோடு உற்சாகத்தையும் தருகிறது அவரது தேசபற்றும் இனப்பற்றும் எங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைகிறது.

இவ்வாறு யாழ் அரசாங்க அதிபரும் மாவட்ட அமைச்சின் செயலாளருமாகிய திரு யோகேந்திரா துரைசுவாமி ஊர்காவற்றுறையில் வாடிவீட்டினைத் திறந்துவைத்த பின்னர் நடைபெற்ற வைபவத்தில் பேசுகையில் கூறினார். அவர் மேலும் கூறியதாவது!

ஊர்காவற்றுறைப் பகுதியிலே மென்மேலும் மக்களின் வசதிக்குரிய கட்டடங்களை அமைக்க வேண்டுமென்று, மாவட்ட அமைச்சுக்கு மக்கள் பல கோரிக்கைகளை விடுத்துள்ளார்கள். இவற்றைப் பரிசீலனை செய்து, படிப்படியாக நிறைவேற்றி வைக்க மாவட்ட அமைச்சு நடவடிக்கை எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளும்.

மக்களது அடிப்படைத் தேவைகளைக் கூடிய விரைவில் நிறைவேற்றி வைக்க வேண்டும் என்ற பிரதான நோக்கத்துடனேயே மாவட்ட அமைச்சை இந்த அரசாங்கம் தோற்றுவித்தது. மாவட்டத்தின் அபிவிருத்திக்காகவும் மக்களின் முன்னேற்றத்திற்காகவும் எவ்வித தடையுமின்றி மாவட்ட அமைச்சு செயற்பட்டு வருகின்றது என்பதை மக்கள் யாவரும் அறிந்திருக்கிறீர்கள். இந்த அடிப்படையில் அமைச்சு செயல் பலவற்றின் மூலமாக பல காலமாகப் புறக்கணிக்கப்பட்டிருந்த எவ்வித அபிவிருத்திகளும் நடைபெறாத பகுதிகளில் எல்லாம் குறிப்பிடத்தக்க அபிவிருத்திவேலைகள் நடைபெற்று வருவதை நீங்கள் அவதானித்து இருப்பீர்கள். வாய்ச்சொல்லை விட்டு செயற்படுத்துவதிலே எமது அமைச்சு அக்கறை கொண்டுள்ளது என்பதை நாம் நிரூபித்துள்ளோம். பதினெட்டு நாட்களில் புங்குடுதீவில் நுண்கலை சேவை நிலையத்தை அமைத்தோம். ஒரு மாத காலத்தில் அச்சுவேலியில் தொழில் நுட்ப உற்பத்தி நிலையத்தை அமைத்தோம். மூன்று மாதகாலத்தில் பால் சேகரிப்பு நிலையத்தை தெ[illegible]லியில் அமைத்தோம். (கொ-தி)

கடத்தல்...

1-ம் பக்க தொடர்ச்சி

டுள்ளது.

காரைநகரிலிருந்து வள்ளமொன்றில் ரோந்து சுற்றி வந்த கடற்படையினர் கடலில் சந்தேகத்திற்கிடமான முறையில் வள்ளமொன்று சென்றுகொண்டிருந்ததை அவதானித்து அதைத் துரத்திச் சென்றனராம். அவ்வள்ளத்திலிருந்தவர்கள் திசைமாற்றி வேகமாக வள்ளத்தைச் செலுத்தியதாகவும் வள்ளத்தை நோக்கி கடற்படையினர் துப்பாக்கியால் சுட்டனர் என்றும் வள்ளம் தென்மராட்சிப் பக்கம் செலுத்தப்பட்டு கரைசேர்க்கப்பட்டு வள்ளத்திலிருந்தவர்கள் குதித்து ஓடித்தப்பி மறைவாகிவிட்டனர் என்றும் கூறப்படுகிறது.

வள்ளத்தையும் முப்பத்தாறு பீடிப்புகையிலை முடைகளையும் கைப்பற்றிய கடற்படையினர் அவற்றை ஊர்காவற்றுறை சுங்கப் பகுதியினரிடம் ஒப்படைத்தனர்.

உரிமை கோர எவருமில்லாத பட்சத்தில் பீடிப் புகையிலை முடைகளும் வள்ளமும் அரசுடைமையாக்கப்பட்டு ஏலத்தில் விற்கப்படுமென சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (கொ)

இன்று மேடையேறும் 'அசட்டுமாப்பிள்ளை'

(யாழ்ப்பாணம்)

வரணியூரான் குழுவினரின் 'அசட்டுமாப்பிள்ளை' நகைச்சுவை நாடகம் இன்று மாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேறுகிறது

வடமாநில [illegible] தொழிற்சங்கங்களின் ஆதரவில் நடைபெறும் இந்நிகழ்ச்சிக்கு யாழ் எம். பி. திரு. வி. யோகேஸ்வரன் தலைமை வகிப்பார்.

பொத்துவில்..

(1ம்- பக்கத் தொடர்ச்சி

.. பொதுச்செயலாளர் கூறியிருப்பதை தாம் மறுப்பதாகவும் திரு. அமிர்தலிங்கமும், திரு. சிவசிதம்பரமும் நேற்று முன்தினம் கொழும்பில் சமர்ப்பித்துள்ள தமது மனுக்களில் தெரிவித்துள்ளனர். (ம-இ)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் [illegible] வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஜூலை 5-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a newspaper at the General Post Office Sri Lanka under No. CE/8948/78, The Eelanaadu; [illegible] Box No. 49, Telegram: "Ee[illegible]